JUDICIAL FORM NO.53

( See Rule 42)
Deposition of Witness
(Chapter XXXIII Code of Criminal Procedure)
IN THE COURT OFJUDICIAL MAGISTRATE, PERUNDURAI

| | | | |
|---|---|---|---|
| Calendar | | C.C.No. | **3/2010** |
| Miscellaneous | | C.M.P.No | |
| Sessions | | S T C No. | |
| Deposition of witness for | **P.W.2** | Prosecution /Defence / Court | |
| Name | **Gowri** | Caste | |
| Husband Name | **Arunachalam** | Calling | |
| Village | **Thendral Nagar, Erode Road** | Religion | |
| Taluk | **Perundurai** | Age | |

(**Accused absent**. **Petition U/s**.317 **Cr**.**P**.**C**., **filed and allowed**).

Solemnly affirmed in accordance with the provisions of the oaths Act 1969( Central Act 44 of 1969 ) of the day of **Date 08.07.2025.**

**முதல் விசாரணை**

**1)** நான் மேற்கண்ட முகவரியில் குடியிருந்து கொண்டு நான் சம்பவ சமயத்தில் மேலப்பாளையம் நடுநிலைபள்ளியில் ஆசிரியராக பணிபுரிந்துவிட்டு தற்போது பணி ஓய்வு பெற்றுவிட்டேன். 17.11.2008ம் தேதியன்று நானும் என் கணவர் அ.சா.1ம் வேலைக்கு செல்லவேண்டி காலை 8.30 மணியளவில் வீட்டை பூட்டிவிட்டு சென்றுவிட்டோம். அன்றைய தினம் பணிபுரிந்து சென்னிமலையில் உள்ள என் அம்மா வீட்டிற்கு நான் சென்றுவிட்டேன். என் கணவர் பணிமுடிந்து வீட்டிற்கு வந்து பார்த்தபோது கிரில் கேட் உடைக்கப்பட்டு கதவு பூட்டு உடைக்கப்பட்டு யாரோ உள்ளே சென்று நாங்கள் படுக்கும் கட்டிலுக்கு கீழே உள்ள ரகசிய அறையில் இருந்த நகைகள் மற்றும் பணம் ரூ.60000/-ம் காணாமல் போய் இருந்தது என கூறினார். நெக்லஸ் 3 பவுன், முத்துமாலை 1 1/2 பவுன், சுரேன் என்று ஆங்கில பெயர் பெறித்த டாலர் செயின் 2 1/2 பவுன், கம்மல் 7 ஜோடி 8 பவுன், மாட்டல் 1/2 பவுன் மொத்தம் 15 1/2 பவுன் யாரோ எடுத்து சென்றுவிட்டார்கள் என்று என் கணவர் எனக்கு போன் மூலம் தகவல் அளித்ததின் பேரில் நான் என் அம்மாவின் வீட்டில் இருந்து கிளம்பி என் வீட்டிற்கு வந்துவிட்டேன்.

2) நான் எங்கள் வீட்டிற்கு வந்ததற்கு பின்பாக என் கணவர் அ.சா.1 பெருந்துறை காவல் நிலையத்திற்கு வந்து எழுத்துமூலமான புகாரை கொடுத்து காணாமல் போன நகை மற்றும் பணம் ரூ.60000/–ம் கண்டுபிடித்து கொடுக்குமாறு கேட்டுக்கொண்டார். பெருந்துறை காவல் நிலைய காவல் ஆய்வாளர் விசாரித்தார். நடந்த விபரங்களை கூறினேன்.

3) 04.04.2009ம் தேதி எங்கள் வீட்டில் இருந்து காணாமல் போன நகைகளை கண்டுபிடித்து வைத்திருப்பதாகவும் பெருந்துறை காவல் நிலையம் வந்து அடையாளம் காட்ட சொல்லி கேட்டுக்கொண்டதன் பேரில் நானும், என் கணவரும் பெருந்துறை காவல் நிலையத்திற்கு சென்று நகைகளை அடையாளம் காட்டினோம். பெருந்துறை காவல் நிலைய காவல் ஆய்வாளர் என்னை விசாரித்தார். பின்னர் நீதிமன்றத்தில் மனு செய்து நகைகளை பெற்று சென்றோம்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**

**1)** சம்பவம் நடக்கும்போது நான் மேலப்பாளையம் நடுநிலைப்பள்ளியில் ஆசிரியராக பணிபுரிந்தேன் என்றால் சரிதான். சம்பவ தினத்தன்று எத்தனை மணிக்கு பணி முடிந்தது என்றால் 5.00 மணி. நான் வீட்டிற்கு வந்த பிறகு தான் என் கணவர் அ.சா.1 வீட்டிற்கு வந்தார் என்றால் சரி. எத்தனை மணிக்கு வந்தார் என்றால் இரவு சுமார் 7.00 மணி இருக்கும். என் வீட்டிற்கு அருகில் நிறைய வீடுகள் உள்ளது என்றால் சரிதான். சம்பவ சமயத்தில் என் வீட்டிற்கு கிழபுறம் உள்ள இடத்தில் சண்முகசுந்தரம் வீடு கட்டி கொண்டிருந்தார். கட்டிடம் கட்டி கொண்டிருப்பதால் அங்கு எத்தனை நபர்கள் பணிபுரிந்தார்கள் என்றால் சுமார் 10 பேர் பணிபுரிந்தார்கள்.

2) என் வீட்டிற்கு வடபுறம் பிரதான சாலை உள்ளது என்றால் சரிதான். சம்பவ சமயத்தில் தென்புறம் காலி இடமாக இருந்தது. மேற்புறமாக செந்தில்மகேஷ் என்பவரின் வீடு உள்ளது. சம்பவ சமயத்தில் கந்தசாமி பணி ஓய்வு பெற்று வீட்டில் இருந்தார் என்றால் சரிதான். அவருடைய வீட்டில் இருந்து என் வீடு தெரியும் என்றால் சரிதான். பிரதான சாலையில் போக்குவரத்து இருக்கும் என்றால் சரிதான். என் கணவர் போன் பண்ணி தகவல் தெரிவித்த பின்னர் தான் திருடு போனது எனக்கு தெரியும் என்றால் சரிதான். நான் வந்த பிறகு தான் என் கணவர் புகார் கொடுக்க வந்தார் என்றால் சரிதான். என்னென்ன பொருட்கள் காணாமல் போனது என நான் சொல்லி

தான் என் கணவருக்கு தெரியும் என்றால் சரியல்ல. பணம் இருப்பதும் நகை இருப்பதும் என் கணவருக்கு தெரியும். என்ன வகையான நகை என என் கணவருக்கு தெரியாது. காவல் நிலையத்திற்கு நான் வரவில்லை என்றால் சரிதான். புகார் எங்கு எழுதப்பட்டது என எனக்கு தெரியாது.

3) போலிசார் விசாரிக்கும்போது நகையின் வடிவம் குறித்து சொன்னேனா என்றால் ஆமாம். போலிசார் வாக்குமூலம் எழுதிக்கொண்டார்கள் அதை நான் படித்து பார்த்தேன் என்றால் சரிதான். நான் படித்து பார்த்த பேப்பரில் கையெழுத்து செய்தேன் என்றால் சரிதான். என் வீட்டிற்கு முன்புறம் உள்ள கேட்டில் பூட்டு உடைக்கப்பட்டிருந்தா என்றால் எனக்கு அந்த விபரம் தெரியாது. காம்பவுண்ட் சுவரின் உயரம் 4 அடி இருக்கும் என்றால் சரிதான். நான் வந்து பார்க்கும்போது உடைக்கப்பட்டிருந்த பூட்டு இருந்தது என்றால் சரிதான். என் வீட்டில் இரண்டு பெட்ரூம் வடபுறமும், தென்புறமும் உள்ளது என்றால் சரிதான். எந்த ரூமில் இருந்த நகைகள் திருடு போனது என்றால் தென்புறம் உள்ள ரூமில் இருந்து காணாமல் போனது. தென்புற ரூமிற்கு பூட்டு இருந்ததா என்றால் இல்லை.

4) பீரோவின் பூட்டு உடைக்கப்படவில்லை என்றால் சரிதான். ரகசிய அறைக்கு பூட்டு உள்ளதா என்றால் இல்லை. அந்த ரூமில் எத்தனை பெட்ரூம் உள்ளது என்றால் ஒரே ரூம் உள்ளது. அந்த ரூமில் ஒரு கட்டில் மட்டும் உள்ளது. எத்தனை ரூபாய் நோட்டுகள் என்ற விபரத்தை போலிசார் விசாரணையில் சொல்லவில்லை என்றால் சரியல்ல. 500 ரூபாய் நோட்டுகள் ஒரு கட்டும், 50 ரூபாய் நோட்டு இரண்டு கட்டுகளும் இருந்தது. போலிசார் விசாரணையில் மேற்படி விபரத்தை சொல்லவில்லை என்றாலும், தற்போது வழக்காக பொய்யாக சொல்கிறேன் என்றாலும் சரியல்ல. போலிசார் கைரேகை, புகைபடம் எடுத்துக்கொண்டார்கள் என்றால் சரிதான். எங்களுடைய கைரேகையும் எடுத்து கொண்டார்கள்.

5) மெயின் டோருக்கு உண்டான பூட்டும் உடைக்கப்பட்டிருந்தது என்றால் சரிதான். காவல் நிலையத்தில் நகையை நான் அடையாளம் காட்ட வரவில்லை என்றால் சரிதான். என் கணவர் தான் வந்தார். எத்தனை மணி நேரம் போலிசார் விசாரித்தார்கள் என்றால் சம்பவத்தன்று இரவு 10.45 மணிமுதல் 11.15 மணி வரை விசாரித்தார்கள். கைரேகை எல்லோரிடமும் வாங்கினார்கள் என்றால் இல்லை. என் கணவரிடம் மட்டும் வாங்கினார்கள். என் வீட்டில் களவு போன பொருட்கள் வேறு,

காவல் நிலையத்தில் காட்டிய நகைகளும் வேறு, நீதிமன்றத்தில் பெற்றுக்கொண்ட நகைகளும் வேறு என்றால் சரியல்ல. 15 பவுன் நகைகளில் சீதனமாக வந்த நகைகளும் உள்ளது, நாங்கள் வாங்கிய நகைகளும் உள்ளது. நாங்கள் வாங்கிய நகைகளுக்கு ரசீதுகள் எதுவும் போலிசாரிடம் களவு போன நகைகள் என்னுடையது என காட்டுவதற்கு ரசீதுகள் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. போலிசார் வேறு ஒரு வழக்கில் கைப்பற்றிய நகைகளை இந்த வழக்கில் கைப்பற்றியுள்ளதாக காண்பித்துள்ளார்கள் என்றால் சரியல்ல. சம்பவம் பற்றி எனக்கு எதுவும் தெரியாது என்றால் சரியல்ல. எதிரிக்கும் இந்த வழக்கிற்கும் சம்மந்தமில்லை என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை**

இல்லை.

Signature of the Witness

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்லச் சொல்ல, என்னால் தட்டச்சருக்குச் சொல்லப்பட்டு, அவரால் திறந்த நீதிமன்றத்தில் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சிக்கு படித்துக் காண்பிக்கப்பட்டு, சாட்சியால் சரி என்று ஒப்புக் கொள்ளப்பட்டு என் முன்னால் சாட்சியின் கையெழுத்து / கைரேகை பெறப்பட்டது.

நீதித்துறை நடுவர்,
பெருந்துறை